தினமணி

நூல்கோல் சாகுபடியில் அசத்தும் விவசாயி

First Published : 10 Mar 2010 03:55:16 AM IST



சிதம்பரத்தை அடுத்த சி.முட்லூரில் முன்னோடி விவசாயி பானுசந்தர் வீட்டுத் தோட்டத்தில் வெற்றிகரமாக சாகுபடி செய்யப்பட்ட நூல்கோல் செடிகளை பார்வையிடுகிறார்

சிதம்பரம், மார்ச் 9: சிதம்பரம் அருகே உள்ள சி.முட்லூர் கிராமத்தில் வடமாநில குளிர் பயிரான நூல்கோல் வெற்றிகரமாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

அண்ணாமலைப் பல்கலை. கிராமப்புற வேளாண் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் கிளேடிஓலஸ் வண்ண மலருடன் ஊடுபயிராக நூல்கோல் அறிமுகம் செய்யப்பட்டு சாகுபடி செய்யப்பட்டது. வெயில் வியன்னா, பர்பிள் வியன்னா என்ற நூல்கோல் ரகங்களின் விதைகள் ஜம்மு மாநில வேளாண்துறை மூலம் பெறப்பட்டு சிதம்பரத்தை அடுத்த முன்னோடி விவசாயி பானுசந்தர் தோட்டத்தில் சாகுபடி அறிமுகம் செய்யப்பட்டது. ஜம்மு மாநில வேளாண் விஞ்ஞானி மனோஜ்நாசர், அண்ணாமலைப் பல்கலை. வேளாண்மைத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் ஆகியோர் தொழில்நுட்ப ஆலோசனையுடன் நாற்றங்கால் அமைத்து சாகுபடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது வடமாநில குளிர் பருவ நூல்கோல் நன்றாக வளர்ந்து இன்னும் சில வாரங்களில் அறுவடை செய்ய தயாராக உள்ளது. தற்போது வெளி மாவட்டங்களில் இருந்து நூல்கோல் கொண்டு வரப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. சி.முட்லூரில் சாகுபடி செய்யப்படும் நூல்கோல் சிதம்பரம், கடலூர், பண்ருட்டி, விருத்தாசலம் சந்தைகளில் விற்பனை செய்யும் போது விவசாயிகள் அதிக லாபம் பெற முடியும். அண்ணாமலைப் பல்கலையில் அதிக வெளிமாநில மாணவர்கள் பயின்று வருவதால் சிதம்பரம் பகுதியில் வடமாநில உணவு விடுதிகள் அதிகரித்துள்ளன. அவர்களுக்கு இந்த நூல்கோல் அவசியமாக தேவைப்படுவதால் சந்தையில் நூல்கோல் விற்பனையில் அதிக லாபம் கிடைக்கும் என விவசாயி பானுசந்தர் தெரிவித்தார்.

மேலும் குளிர்ப்பதன வசதியுடன் சி.முட்லூர் பகுதி விவசாயிகள் காய்கறிகள் மற்றும் பூக்கள் ஆகியவற்றை அதிக நாள்கள் பாதுகாத்து விற்பனை செய்ய வளர்ச்சித் துறைகள் மற்றும் வங்கியுடன் இணைந்து விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ள உள்ளன என்று உழவர் மன்றங்களின் கூட்டமைப்புத் தலைவர் பி.ரவீந்திரன் தெரிவித்தார்.

**குறைந்த விலையில் உளுந்து கொள்முதல்**

First Published : 10 Mar 2010 12:00:00 AM IST

சிதம்பரம், மார்ச் 9: சிதம்பரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டம் இருந்தும் செயல்பாடில்லை. மார்க்கெட்டிங் கமிட்டி அமைக்கப்படாததால் விவசாயிகளிடம் உளுந்து கொள்முதல் செய்ய இயலாமல் உள்ளது என வேளாண் உற்பத்தித் துறை ஆணையரிடம் விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

÷சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் உளுந்து பயிர் உற்பத்தியை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்து சென்னை வேளாண் உற்பத்திதுறை ஆணையர் நந்தகிஷோர், வேளாண் இயக்குநர் கோசல்ராம் ஆகியோர் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர்.

÷சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் வாழக்கொல்லை, துணிசிரமேடு, உத்தமசோழகன், சிவாயம் உள்ளிட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள உளுந்து பயிர்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

÷அப்போது அங்குள்ள விவசாயிகளிடம் உளுந்து பயிர் உற்பத்தி பெருக்குவது குறித்து என்ன செய்வது? என கலந்துரையாடினர்.

÷அப்போது விவசாய சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் அதிகாரிகளிடம் தெரிவித்தது:

இந்த ஆண்டு நாங்கள் வீட்டில் வைத்திருந்த குறைந்த விதையை பயன்படுத்தினோம். ÷எனவே அடுத்த ஆண்டு விவசாயிகளுக்கு வேளாண்துறை மூலம் கூடுதலாக விதைகளை வழங்க வேண்டும். விருத்தாசலம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் உளுந்து 100 கிலோ மூட்டை ரூ.4800-ம், பண்ருட்டியில் மூட்டை ரூ.4300-ம் வாங்குகின்றனர்.

÷ஆனால் மார்க்கெட்டிங் கமிட்டி இல்லாததால் சிதம்பரத்தில் தனியாரிடம் உளுந்தை மூட்டை ஒன்று ரூ.2800-க்கு விற்று வருகிறோம்.

÷சிதம்பரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இருந்தும் மார்க்கெட்டிங் கமிட்டி இல்லாததால் உளுந்து கொள்முதல் செய்யப்படவில்லை.

மேலும் வேளாண்துறையினர் விவசாயிகளிடம் கிலோ ரூ.31.80-க்கு உளுந்தை கொள்முதல் செய்கின்றனர்.

÷ஆனால் உளுந்து விதை ரூ.55-க்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.

விவசாயிகளிடம் குறைந்து விலைக்கு உளுந்து வாங்கப்பட்டு கூடுதல் விலைக்கு விதை விற்கப்படுகிறது.

÷எனவே உளுந்து விதைக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என வேளாண் இயக்குநரிடம் பி.ரவீந்திரன் கோரிக்கை வைத்தார்.

கோரிக்கைகளை ஏற்று வரும் ஆண்டிலிருந்து சிதம்பரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் உளுந்து கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர்.

÷மேலும் உளுந்து விலை நிர்ணயம் செய்வது குறித்து பரிசீலனை செய்யப்படும் என தெரிவித்தனர்.

÷வேளாண் உற்பத்திதுறை ஆணையர் மற்றும் இயக்குநருடன் விவசாய சங்கத் தலைவர்கள் கார்மாங்குடி வெங்கடேசன், பட்டாம்பாக்கம் வேங்கடபதி, பண்ருட்டி நரசிம்மன், வேளாண் இணை இயக்குநர் இளங்கோவன், உரக்கட்டு உதவி இயக்குநர் சுந்தரராஜன், விதை சான்று அதிகாரி கனகசபை உள்ளிட்டோர் உடன் சென்று உளுந்து பயிரிடப்பட்ட பகுதிகளை பார்வையிட்டனர்.

## குறைந்த விலையில் உளுந்து கொள்முதல்

First Published : 10 Mar 2010 12:00:00 AM IST

சிதம்பரம், மார்ச் 9: சிதம்பரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டம் இருந்தும் செயல்பாடில்லை. மார்க்கெட்டிங் கமிட்டி அமைக்கப்படாததால் விவசாயிகளிடம் உளுந்து கொள்முதல் செய்ய இயலாமல் உள்ளது என வேளாண் உற்பத்தித் துறை ஆணையரிடம் விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

÷சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் உளுந்து பயிர் உற்பத்தியை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்து சென்னை வேளாண் உற்பத்திதுறை ஆணையர் நந்தகிஷோர், வேளாண் இயக்குநர் கோசல்ராம் ஆகியோர் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர்.

÷சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் வாழக்கொல்லை, துணிசிரமேடு, உத்தமசோழகன், சிவாயம் உள்ளிட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள உளுந்து பயிர்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

÷அப்போது அங்குள்ள விவசாயிகளிடம் உளுந்து பயிர் உற்பத்தி பெருக்குவது குறித்து என்ன செய்வது? என கலந்துரையாடினர்.

÷அப்போது விவசாய சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் அதிகாரிகளிடம் தெரிவித்தது:

இந்த ஆண்டு நாங்கள் வீட்டில் வைத்திருந்த குறைந்த விதையை பயன்படுத்தினோம். ÷எனவே அடுத்த ஆண்டு விவசாயிகளுக்கு வேளாண்துறை மூலம் கூடுதலாக விதைகளை வழங்க வேண்டும். விருத்தாசலம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் உளுந்து 100 கிலோ மூட்டை ரூ.4800-ம், பண்ருட்டியில் மூட்டை ரூ.4300-ம் வாங்குகின்றனர்.

÷ஆனால் மார்க்கெட்டிங் கமிட்டி இல்லாததால் சிதம்பரத்தில் தனியாரிடம் உளுந்தை மூட்டை ஒன்று ரூ.2800-க்கு விற்று வருகிறோம்.

÷சிதம்பரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இருந்தும் மார்க்கெட்டிங் கமிட்டி இல்லாததால் உளுந்து கொள்முதல் செய்யப்படவில்லை.

மேலும் வேளாண்துறையினர் விவசாயிகளிடம் கிலோ ரூ.31.80-க்கு உளுந்தை கொள்முதல் செய்கின்றனர்.

÷ஆனால் உளுந்து விதை ரூ.55-க்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.

விவசாயிகளிடம் குறைந்து விலைக்கு உளுந்து வாங்கப்பட்டு கூடுதல் விலைக்கு விதை விற்கப்படுகிறது.

÷எனவே உளுந்து விதைக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என வேளாண் இயக்குநரிடம் பி.ரவீந்திரன் கோரிக்கை வைத்தார்.

கோரிக்கைகளை ஏற்று வரும் ஆண்டிலிருந்து சிதம்பரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் உளுந்து கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர்.

÷மேலும் உளுந்து விலை நிர்ணயம் செய்வது குறித்து பரிசீலனை செய்யப்படும் என தெரிவித்தனர்.

÷வேளாண் உற்பத்திதுறை ஆணையர் மற்றும் இயக்குநருடன் விவசாய சங்கத் தலைவர்கள் கார்மாங்குடி வெங்கடேசன், பட்டாம்பாக்கம் வேங்கடபதி, பண்ருட்டி நரசிம்மன், வேளாண் இணை இயக்குநர் இளங்கோவன், உரக்கட்டு உதவி இயக்குநர் சுந்தரராஜன், விதை சான்று அதிகாரி கனகசபை உள்ளிட்டோர் உடன் சென்று உளுந்து பயிரிடப்பட்ட பகுதிகளை பார்வையிட்டனர்.

தினமலர்

## நெகமம் கொப்பரை ஒரு கிலோ ரூ. 31.50

பொள்ளாச்சி : நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 31.50 ரூபாய் விலை கிடைத்தது. நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 18 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 111 மூட்டை கொப்பரையை எடுத்து வந்தனர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 47 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 29.70 ரூபாய் முதல், அதிகபட்சம் 31.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 64 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 22.30 ரூபாய் முதல், அதிகபட்சம் 28.75 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறியதாவது: வரத்து அதிகரிப்பால் கடந்த வாரத்தை விட இந்தவாரம் கொப்பரை கிலோவுக்கு 50 பைசா விலை குறைந்து காணப்பட்டது என்றனர்.

## அதிக மகசூல் தரும் காய்கறிகளை விளைவிக்க வேண்டும்: பேராசிரியர் வைத்தியநாதன் அறிவுரை

திட்டக்குடி : விவசாயிகள் அதிக மகசூல் தரும் காய்கறி பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என பேராசிரியர் வைத்தியநாதன் பேசினார்.திட்டக்குடியில் வேளாண்மை பொறியியல் துறை பாசனப்பகுதி மேன்மை மற்றும் நீர் மேலாண்மை வெலிங் டன் நீர்த்தேக்க திட்ட பயிலரங்கம் நடந்தது. விழுப் புரம் செயற்பொறியாளர் பழனிசாமி தலைமை தாங்கினார். விருத்தாசலம் உதவி செயற்பொறியாளர் சுகுமார் முன்னிலை வகித் தார். உதவி செயற்பொறியாளர் நடேசன் வரவேற்றார்.தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் குறித்து உதவி செயற்பொறியாளர் பத்மநாபன், பாசனப்பகுதி மேன்மை திட் டம் குறித்து இளநிலை பொறியாளர் முருகேசன், மாற்றுப் பயிர்த்திட்டம் குறித்து வேளாண் உதவி அலுவலர் குணசேகரன், மண்ணில் மக்குச்சத்து அதிகரிக்கும் வழி, அறுவடைக்குப்பின் தொழில் நுட்பம் குறித்து விருத்தாசலம் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் செல்வராஜ், கண்ணன் பேசினர்.

பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் வைத்தியநாதன் பேசியதாவது:
உலகம் கணினி மயமாக மாறி வரும் நிலையில் விவசாயத்தை அழிய விடாமல், விவசாய வேலைகளுக்கு அனைவரும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். வீட்டிற்கு வீடு கிடைத்த மாட்டுச்சாணம் தற்போது கடன் வாங்கும் நிலைக்கு மாறியுள்ளது. ஒரே மரத்தில் நான்கு ரக பயிர்களை விளைவிக்கும் அளவிற்கு விஞ்ஞானம் முன்னேறியுள்ளது. அதிக மகசூல் மற்றும் லாபம் தரும் காய்கறி பயிர்களுக்கு விவசாயிகள் அதிகளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பண்ருட்டி- கடலூர் சாலையில் அமைந்துள்ள பாலூரில் தமிழக வேளாண் பல்கலைக் கழகத்தின் கீழ் காய்கறி ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. இங்கு காய்கறி விதைகள், பழக் கன்றுகள், நெல்விதைகள் தரமாக உற்பத்தி செய்து மலிவான விலையில் வழங்கி வருகிறோம். பத்து விதமான காய்கறி விதைகள் அடங்கிய ஒரு பாக்கெட் 20 ரூபாய்க்கு கிடைக்கிறது. மேலும் விவரங்களுக்கு 94424-72103, 04142- 75222 எண்ணுக்கு தொடர்பு கொண்டு விவசாயிகள் பயனடையலாம். இவ்வாறு பேராசிரியர் வைத்தியநாதன் பேசினார்.விழாவில் தாஜுதீன், சிதம்பரம் ரவீந்திரன், உழவர்மன்ற தலைவர் வேணுகோபால், பாசன சங்கத் தலைவர்கள் சோமசுந்தரம், மருதாச்சலம், வடிவேல், பொன்னுசாமி, ராஜசேகர், ரங்கநாதன் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். உதவி பொறியாளர் செந் தில்குமார் நன்றி கூறினார்.

## கோதுமை சாகுபடி வயல்வெளி விழா

தர்மபுரி: தர்மபுரி அடுத்த சவுளூரில் வேளாண் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் ஆத்மா திட்டத்தின் கீழ் வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப ஆலோசனையுடன் கோதுமை வயல் விழா நடந்தது. சவுளூர் கோவிந்தம்மாள் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் நடந்த விழாவுக்கு, வேளாண் இணை இயக்குனர் முகமது அலி தலைமை வகித்து பேசியதாவது:  கோதுமை பயிருக்கு நெல்லை விட குறைந்த அளவே தண்ணீர் தேவையை கொண்டது. சாகுபடி செலவும்  குறைவு ஆகவே ஒவ்வொரு விவசாயியும் மாற்று பயிராக கோதுமையை 10 சென்ட் பரப்பில் சாகுபடி செய்து அதன்  மகசூல் வருவாயை கணக்கிட்டு லாபமாக இருந்தால் பரப்பளவை அதிகப்படுத்தி பயிரிடலாம். இவ்வாறு அவர் பேசினார்.

பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ஸ்ரீதர் பேசும்போது,""கோதுமை பயிர் குறுகிய கால பயிர் அதிக பரப்பு இல்லாமல், பூச்சி நோய் தாக்குதல் இல்லாமல் வளரக்கூடிய பயிர் ஆகவே விவசாயிகள் குளிர்கால பயிரான கோதுமையை அக்டோபர் கடைசி வாரத்தில் பயிரிட்டு நல்ல மகசூலை பெறலாம்," என்றார். வேளாண் அறிவயில் நிலைய பூச்சி நோயியல் துறை உதவி பேராசிரியர் சண்முகம் பேசும்போது,""மற்ற பயிர்களை ஒப்பிடும்போது, கோதுமையில் பூச்சி நோய் தாக்குதல் மிகவும் குறைவு கதிர் பருவத்தில் சாம்பல் நிற கூண் வண்டும், ஸ்மட் என்னும் பூஞ்சான நோயும் தாக்கலாம். இதனை எளிய முறையில் கட்டுப்படுத்தலாம்," என்றார். வேளாண் உதவி இயக்குனர் கமலா, வேளாண் அலுவலர் அமுதவள்ளி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேளாண் மானியம் வழங்கும் விழா

கோபிசெட்டிபாளையம்: வேளாண் துறை சார்பில் பவானி வட்டாரத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு மானியம் வழங்கும் விழா வேளாண்மை உதவி இயக்குனர் பாபு தலைமையில் நடந்தது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தி கீழ் மண்புழு உரம் தயாரிக்க குடில் அமைக்க பழனிசாமி என்பருக்கு மான்யமாக 50 ஆயிரம் ரூபாய், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், பவர் டிரில்லர் வாங்க முத்துசாமி என்பவருக்கு மான்யமாக 45 ஆயிரம் ரூபாயை, மாநில கூடுதல் வேளாண் துறை இயக்குனர் மதுமதி வழங்கினார்.

மாவட்ட வேளாண் இணை இயக்குனர் கோபால், துணை இயக்குனர் முத்துசாமி, உதவி இயக்குனர் நடராஜ், வேளாண் அலுவலர் சுந்தரமூர்த்தி, விதை சான்று அலுவலர் உமாபதி உள்பட பலர் கலந்து கொண்டார். பவானி அரசு விதைப்பண்ணை, உயிரியல் கட்டுபாட்டு மையம் ஆகியவற்றை மாநில வேளாண் கூடுதல் இயக்குனர் மதுமதி ஆய்வு செய்தார்.

## 50 சதவீத மானியத்தில் அடி உரம் வினியோகம்

வாலாஜாபாத் : வாலாஜாபாத் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் சொர்ணவாரி பட்டத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் அடி உரம் வழங்கப்பட உள்ளது.

சொர்ணவாரி பட்டத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு அடி உரமான ஜிங்சல்பேட் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. வாலாஜாபாத் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திலும், பரந்தூர் வேளாண்மை கிடங்கிலும் ஜிங் சல்பேட் 22 டன் வாலாஜாபாத் வேளாண்மை விரிவாக்க மையம், பரந்தூர் சேமிப்பு கிடங்கு ஆகியவற்றில் இருப்பு உள்ளது. பயன் பெற விரும்பும் விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகவும் என உதவி வேளாண்மை உதவி இயக்குனர் பழனிவேலு தெரிவித்தார்.

**அரசு உத்தரவால் பருப்பு விலை அதிகரிப்பு**

மதுரை: வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருப்புகளை, "ஏற்றுமதி செய்யலாம்' என்ற மத்திய அரசு உத்தரவால், பருப்பு விலை மீண்டும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளன.கடந்தாண்டு பருப்பு தட்டுப்பாடு கடுமையாக இருந்ததால், தான்சானியா, கனடா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதனால் வெளிமார்க்கெட்டில் அனைத்து பருப்பு விலைகளும் கடுமையாக உயர்ந்தன. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பருப்புகளை, ஏற்றுமதி செய்யவும் மத்திய அரசு தடை விதித்தது.வடகிழக்கு பருவமழையை பயன்படுத்தி, வடமாநிலங்களில் அதிகளவு பருப்பு பயிரிட்டு, அறுவடை செய்ததால் விலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.இந்நிலையில், இறக்குமதி செய்த பருப்புகளை ஏற்றுமதி செய்யலாம் என, சில நாட்களுக்கு முன், மத்திய அரசு உத்தரவிட்டது. இது உடனடியாக அமலுக்கு வந்ததால், பருப்பு விலை மீண்டும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. ""இந்த உத்தரவால் மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது'' என்கிறார் மதுரை பருப்பு விலை வியாபாரிகள் சங்க செயலாளர் வெற்றிச்செல்வன்.பருப்பு விலை உயர்வு குறித்து, அவர் கூறியதாவது :மதுரையில் 4400 ரூபாய்க்கு விற்ற நூறு கிலோ துவரம் பயறு, இன்று 4500 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. துவரம் பருப்பு 6200 ரூபாய் என்பதில் மாற்றமில்லை. உளுந்தம் பயறு 4200 ரூபாயிலிருந்து 4450 ரூபாய்க்கும், பருப்பு 6100 ரூபாயிலிருந்து 6200 ரூபாய்க்கும், கடலை பயறு 2200 ரூபாயிலிருந்து 2150 ரூபாய்க்கும், பருப்பு 2700 ரூபாயிலிருந்து 2650 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.பாசி பயறு 6100 ரூபாய், பருப்பு 7200 ரூபாய் என்பதில் மாற்றமில்லை. பட்டாணி பயறு 1400 ரூபாயிலிருந்து 1425 ரூபாய்க்கும், பருப்பு 1600 ரூபாயிலிருந்து 1675 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது என்றார்.

**பாமாயில் விலை மீண்டும் உயர்வு**

மதுரை: மலேசியாவில் உற்பத்தி குறைவால், பாமாயில் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. மதுரையில் கடந்த வாரம் 650 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் பாமாயில், நேற்று 665 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மற்ற எண்ணெய் குறித்து,வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது :நிலக்கடலை வரத்து அதிகரித்துள்ளதால், கடலை எண்ணெய் 1070 ரூபாயிலிருந்து 1040 ரூபாயாக குறைந்துள்ளது. ரைஸ்பிரான் ஆயில் 665 ரூபாய், சூரியகாந்தி எண்ணெய் 800, வனஸ்பதி 700, தேங்காய் எண்ணெய் 960, நல்லெண்ணெய் 1350, தும்பை நல்லெண்ணெய் 1820 ரூபாய் என்பதில் மாற்றமில்லை என்றார்.

**துல்லிய பண்ணை திட்டத்தால் காய்கறி சாகுபடியில் கூடுதல் லாபம் : நபார்டு அதிகாரி பேச்சு**

நீடாமங்கலம்: துல்லிய பண்ணை திட்டத்தில் காய்கறி சாகுபடி செய்வதன் வாயிலாக கூடுதல் லாபம் கிடைக்கும் என்று நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அதிகாரி ராகவன் தெரிவித்தார்.
நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் 4 நாட்கள் காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி முகாம் தொடங்கியது. இதை நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அதிகாரி ராகவன் தொடக்கி வைத்து பேசுகையில், துல்லிய பண்ணைத்திட்டம் தமிழகத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. குறைந்த ஆள் செலவில் குறைந்த தண்ணீரைக் கொண்டு அதிக பரப்பளவில் இத்திட்டத்தின் மூலம் சாகுபடி செய்வதில் ஏக்கருக்கு 4 லட்சம் ரூபாய் நிகர லாபம் கிடைக்கிறது என்றார்.அறிவியல் நிலையத் தலைவர் செங்குட்டுவன், நபார்டு வங்கி வளர்ச்சி அதிகாரி ராகவன், இணை பேராசிரியர் பவுன்ராஜ் ஆகியோர் பேசினர். இத்திட்டத்தின் மூலம் காய்கறி பயிர் செய்யும் விவசாயிகளின் வயல்களுக்கு அழைத்துச் சென்று நேரிடையே சாகுபடி முறைகள் விளக்கப்பட்டன.இதன் நிறைவு விழாவிற்கு சித்தமல்லி ஊராட்சித் தலைவர் நடேச மணி தலைமை வகித்து பயிற்சியில் கலந்து கொண்ட 80

விவசாயிகளுக்கும் சான்றிதழ்களை வழங்கினார். ஏற்பாடுகளை பயிற்சி ஒருங்கிணைப்பாளர் குமணன் செய்திருந்தார். இணை பேராசிரியர் பவுன்ராஜ் வரவேற்றார்.

### விதை விற்பனை நிலையம் மூலம் தரமான விதை அதிகாரிகளுக்கு புதுகை கலெக்டர் 'அட்வைஸ்'

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் விதை விற்பனை நிலையம் மூலம் விவசாயிகளுக்கு தரமான விதை கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்' என விதை சான்றளிப்புத் துறைக்கு கலெக்டர் அறிவுரை வழங்கியுள்ளார்.புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் தமிழக விதை சான்றளிப்புத் துறையின் சார்பில் விதை ஆய்வு அலுவலர்கள் பங்கேற்ற மாநில அளவிலான கருத்தரங்கு நடந்தது. இதை துவக்கிவைத்து கலெக்டர் சுகந்தி பேசியதாவது:மாறிவரும் பருவநிலைக்கு ஏற்றவாறு விவசாயிகள் சாகுபடி செய்ய தேவையான வேளாண் இடுபொருட்கள் வழங்கவேண்டும். இதுபோன்று காலநிலைக்கு ஏற்றவாறு நீர்வளம் மற்றும் நிலவளத்தை கவனத்தில்கொண்டு பயிர் சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றுமாறு விவசாயிகளுக்கு ஆலோசனை மற்றும் அறிவுரை வழங்கப்படவேண்டும்.

விவசாயிகளின் பொருளாதாரத் திறன் மற்றும் சமுதாய சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு அதிக சந்தை விலை கிடைக்கும் விதமான பயிர்திட்ட செயலாக்கம் விரைவுபடுத்த வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக விதை விற்பனை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு தரமான விதை கிடைப்பதை விதை சான்றளிப்புத் துறை உறுதிசெய்யவேண்டும். விதை ஆய்வுப் பிரிவின் மூலம் அத்தியாவசிய பண்டங்கள் சட்டம் மற்றும் விதைச் சட்டத்தை உரியவாறு நடைமுறைப்படுத்தி தரமான விதைகளை விற்னை செய்ய வேண்டும். இவை நமது எதிர்கால சந்ததியினருக்கு நோயற்ற வாழ்வு கிடைக்க ஏதுவாக அமையும்.

அரசின் திட்டங்கள் மற்றும் சலுகைகள் தகுதியுடைய விவசாயிகள் அனைவரையும் சென்றடையும் விதத்தில் சமுதாய அக்கரையுடன் வேளாண் துறையினர் பணியாற்றவேண்டும்.கருத்தரங்கில் கலந்துகொண்டு தமிழ்நாடு விதைசான்றளிப்புத் துறை இயக்குனர் கார்முகிலன் பேசியதாவது: விதை ஆய்வு பிரிவில் பணியாற்றிவரும் விதை ஆய்வு அலுவலர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள எட்டாயிரத்து 43 அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களை அவ்வப்போது ஆய்வு செய்துவருகின்றனர். குறிப்பாக, விற்பனை உரிமம், விதைகளின் தரம், முளைப்புத் திறன் மற்றும் இனத்தூய்மையினை பகுப்பாய்வு செய்து அதன் தரத்தை உறுதிபடுத்தி வருகின்றனர். தமிழகம் முழுவதும் விவசாயிகளின் தேவைக்கேற்ப தரமான விதைகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். கருத்தரங்கில் விதைச் சான்று இணை இயக்குனர் சுப்பிரமணியன், விதை ஆய்வு துணை இயக்குனர் அன்பழகன், வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணசாமி, வேளாண் வணிக துணை இயக்குனர் தங்கவேலு, விதைச் சான்று உதவி இயக்குனர்கள் அண்ணாமலை, ஜெயராஜ், தோட்டக்கலை உதவி இயக்குனர் சிங்காரம், விதை ஆய்வு இணை இயக்குனர் துரைசாமி உட்பட வேளாண் துறை அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

### புதுகையில் விவசாயிகள் சங்க கூட்டம்

புதுக்கோட்டை: புதுகையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக்குழு கூட்டம் நடந்தது.மாவட்ட தலைவர் சோமையா தலைமை வகித்தார். எம்எல்ஏ ராஜசேகரன், இ.கம்யூ மாவட்ட செயலாளர் முத்துக்குமரன், மாவட்ட துணை செயலாளர் சுந்தராஜன், விவசாயிகள் சங்க கவுரவத்தலைவர் அழகர்சாமி, மாவட்ட செயலாளர் மாதவன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஆறுமுகம், அல்லாபிச்சை, நடராஜன், நல்லதம்பி ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் சங்க மாநாடு அறந்தாங்கியில் ஏப்ரல் 3 மற்றும் 4ம் தேதிகளில் நடத்துவது, மாவட்டத்தில் நிலவும்

மின்வெட்டை கண்டித்து புதுகை மேற்பார்வை அலுவலகத்தை முற்றுகையிடுவது என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விதை கிராம பயிற்சி முகாம்**

சிவகங்கை: சிவகங்கை அருகே சுந்தரநடப்பில் விதை கிராம திட்ட, பயிற்சி முகாம் நடந்தது. உதவி இயக்குனர் செந்தில்நாதன் முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் (விதை சான்று) விவேகானந்தன், அலுவலர் முருகபாரதி பயிற்சி அளித்தனர். சுந்தரநடப்பு, மதகுபட்டி, கீழக்கண்டனி, முத்துப் பட்டியி விவசாயிகள் பங்கேற்றனர்.உளுந்து விற்பனை:சிவகங்கை ஒன்றிய விவசாயிகளுக்கு, மானிய விலையில் உளுந்து விற்கப்படுகிறது. நிலக்கடலை விவசாயிகளுக்கு, மானிய விலையில் ஜிப்சம் விற்பனைக்கு உள்ளது என உதவி இயக்குனர் செந்தில்நாதன் தெரிவித்தார்.

**சர்க்கரை, பருப்பு விலை குறைந்தது: எலுமிச்சை விலை இரட்டிப்பு**

திருப்பூர் : வெயில் காலம் துவங்கி விட்ட தால், எலுமிச்சை பழத்தின் விலை "கிடுகிடு'வென உயர்ந்துள்ளது; கடந்த நான்கு நாட்களில் கிலோ வுக்கு 20 ரூபாய் வரை அதிகரித்து, விலை இரட்டிப்பாகி உள்ளது.

எலுமிச்சை வியாபாரி ராமசாமி கூறியதாவது:வெயில் காலம் துவங்கி உள்ள தால், நான்கு நாட்களில் எலுமிச்சை விலை கிலோவுக்கு 20 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ 20 முதல் 25 ரூபாய் என இருந்தது; தற்போது 40 முதல் 45 ரூபாய் வரை விற்பனையாகிறது. ஒரு எலுமிச்சை 1.50 முதல் 2.50 ரூபாய் என பழத் தின் அளவுக்கேற்ப விற்கிறது. பழனி, ஒட்டன்சத்திரம், திண் டுக்கல் பகுதிகளில் மழை குறை வால், எலுமிச்சை விளைச்சல் குறைந்துள்ளது. வரவு குறைவாக இருப்பதாலும், வெயில் காலத் துக்கு தேவை அதிகமாக இருப்ப தாலும் விலை ஏற்றம் ஏற்பட்டுள் ளது. கர்நாடகா பீசாய்ப்பூர் பகுதி யில் இருந்து வரும் எலுமிச்சை வரத்து குறைந்துள்ளதும் விலை ஏற்றத்துக்கு காரணம்.பழனி பகுதியில் 1,300 காய் வரை கொண்ட ஒரு சிப்பம் 1,500 ரூபாயில் இருந்து 2,500 ரூபாய் வரை விற்கிறது. குற்றாலம் புளியங்குடி பகுதியில் மட்டும் ஆர் டர் கொடுத்தால் அனுப்பப்படு கிறது. மற்ற இடங்களுக்கு நேரில் சென்று வாங்கும் நிலை உள்ளது.

கோவை, ஈரோடு, சேலம் என இதர பகுதிகளில் இருந்தும் வியாபாரிகள் எலுமிச்சை வாங்க குவிவதால், விலை அதிகரிக்கிறது. கடந்தாண்டை போலவே, இந்தாண்டும் சித்திரை மாதத்தில் ஒரு எலுமிச்சை பழம் நான்கு ரூபாயை தொட்டு விடும். விலை தொடர்ந்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது, என்றார்.சர்க்கரை, பருப்பு விலை குறை கிறது: தினசரி மார்க்கெட் சங்க தலை வர் பாலசுப்ரமணியம் கூறியதாவது: சர்க்கரை விலை மூட்டைக்கு 500 ரூபாய் குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் இருந்து கிலோவுக்கு இரண்டு ரூபாய் குறைந்து, கிலோ 34 ரூபாய்க்கு விற்கிறது. துவரம் பருப்பு விலை கிலோவுக்கு ஐந்து ரூபாய் குறைந்து 55 ரூபாய்; வெள்ளை உளுந்து 65; கருப்பு உளுந்து 53; பச்சைப்பயிறு 63; பாசிப்பருப்பு 72; தட்டைப்பயிறு 45; கொள்ளு 21; சுண்டல் கடலை 30 ரூபாய்க்கு விற்கிறது, என்றார்.முட்டை விலை சரிவு: முட்டை வியாபாரி குப்புசாமி கூறுகையில், ""வெயில் காலம் துவங்கியுள்ளதால், விற்பனையில் சரிவு ஏற்பட் டுள்ளது. முட்டைக்கு ஐந்து காசு வரை விலை குறைந்துள்ளது. கொள்முதல் விலையில் 2.50 ரூபாயில் இருந்து 2.45 ரூபாயாக குறைந்துள்ளது. மொத்த விற்பனை யில் 2.50; சில்லரை விற்பனையில் 2.75க்கு விற்பனையாகிறது. எதிர் பார்த்த அளவுக்கு விற்பனை இல்லை; மேலும், விலை குறைய வாய்ப்பு உள்ளது,'' என்றார்.

**தக்காளி விலை வீழ்ச்சி; இஞ்சி விலை உயர்வு:**

தக்காளி விலையில் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டு வரு கிறது; இஞ்சி விலை கிலோவுக்கு 10 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. தென்னம்பாளையம் மார்க் கெட்டில், கடந்த சில வாரங் களாகவே ஒரு கூடை தக்காளி 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனையாகிறது. நேற்று, ஒரு கூடை 20 ரூபாய் வரை விற்றது. இஞ்சி விலை கிலோவுக்கு 10 ரூபாய் வரை அதிகரித்து, 35 ரூபாயில் இருந்து 45 ரூபாய் என உயர்ந்துள்ளது.ஒரு கிலோ தக்காளி 5 ரூபாய்; கத்தரிக்காய் 20; சின்ன வெங்காயம் 10 முதல் 14 வரை, பெரியது 15; குண்டு மிளகாய் 24, சம்பா 20; அரசாணிக்காய் 5; பூசணிக்காய் 8; பாகற்காய் 16; அவரைக்காய் 20; முட்டைக்கோஸ் 10; உருளைக் கிழங்கு 15; புடலங்காய் 12; மேரக்காய் 12; கேரட் 28; பீன்ஸ் 35; பீட்ரூட் 12; முள்ளங்கி 12; லோக் கல் சேனை 20; காலிபிளவர் 10; சுரைக்காய் ஒன்று 5 ரூபாய், கீரை வகை கட்டு ஒரு ரூபாய்; கொத்த மல்லி கட்டு 4; கறிவேப்பிலை 30 ரூபாய் என விற்கப்படுகிறது.

**வெங்காய விலை வீழ்ச்சி; விவசாயிகள் விரக்தி!**

பொங்கலூர் : திருப்பூர் மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் விலை சரிந்துள்ளதால், விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.பி.ஏ.பி., கால்வாயில் நான்காம் மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதால், கிணறு, போர்வெல் போன்றவற்றில் நீர்மட்டம் உயர்ந்தது. தேவையான அளவு தண்ணீர் இருந்ததாலும், வெங்காயம் பயிரிட நல்ல சீதோஷ்ண நிலை நிலவியதாலும், விவசாயிகள் வெங்காயம் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டினர்.பொங்கலூர், உகாயனூர், பொல்லிக்காளிபாளையம், கண்டியன்கோவில், அலகுமலை, கொடுவாய், காட்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன், சின்ன வெங்காயம் கிலோ 35 ரூபாய் வரை விற்பனையானது. விவசாயிகளே வெங்காயத்தை விதைக்காக அதிக அளவில் கொள்முதல் செய்ததாலும், சீசன் இல்லாததாலும், நோய் தாக்கி வெங்காய விளைச்சல் குறைந்ததாலும், விலை உயர்வு தவிர்க்க முடியாததாகி விட்டது.

தற்போது, அறுவடை சீசன் துவங்கியுள்ளதாலும், வெளிமாவட்டங்களிலும், கர்நாடகாவிலும் வெங்காய விளைச்சல் அமோகமாக இருப்பதால், வெங்காய விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளிடம் கிலோ ஏழு ரூபாய் முதல் ஒன்பது ரூபாய் வரை வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. திருப்பூர் மார்க்கெட்டில் 20 கிலோ கொண்ட சிப்பம், 200 ரூபாய்க்கு விற்பனையாகிறது. சில்லரை விற்பனையில் கிலோ 18 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. இந்த விலை வீழ்ச்சி, விவசாயிகளை பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது. உரம், மருந்து விலை ஏற்றம், ஆள் பற்றாக்குறை போன்ற காரணங்களால் சோதனைக்கு ஆளாகியுள்ள விவசாயிகளுக்கு, தற்போதைய விலை வீழ்ச்சி பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளது.அறுவடை சீசனில் விலை குறைவதும், அறுவடை முடிந்ததும் விலை ஏறுவதும் வாடிக்கையாகி விட்டது. இருப்பு வைத்து விற்கும் அளவுக்கு, விவசாயிகளுக்கு பொருளாதார வசதி இருப்பதில்லை. இதனால், அறுவடை செய்ததும் உடனடியாக விற்று விடுகின்றனர். விலை குறைவை பயன்படுத்தி இருப்பு வைக்கும் வியாபாரிகள், மறுபடியும் விவசாயிகளுக்கே விதை வெங்காயமாக அதிக விலைக்கு விற்கின்றனர்.

விவசாயிகள் கூறுகையில், "ஏக்கருக்கு சராசரியாக ஐந்து டன் மகசூல் கிடைக்கிறது; 40 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது; விதை, மருந்து, உரம், களை எடுத்தல், அறுவடை போன்றவற்றுக்கு 30 ஆயிரம் ரூபாய் செலவாகி விடுகிறது; நன்றாக விளைச்சல் இருந்தால் மட்டுமே ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும்; தண்ணீர் பாய்ச்ச தனியாக கூலி ஆள் நியமித்தால், இப்பணமும் மிஞ்சாது,' என்றனர். விலை வீழ்ச்சி பிரச்னையால், வெங்காயத்துக்கு அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும்; குளிர்பதன கிடங்கு ஏற்படுத்தி, இருப்பு வைக்கும் கடனுதவி வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

## தென்னை விவசாயம் செய்ய விவசாயிகள் ஆர்வம்

பல்லடம் : விவசாய வேலைகளுக்கு ஆட்கள் பற்றாக்குறையால், பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் தென்னை மரம் வளர்ப்பில் விவசாயிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் விசைத்தறி, கறிக்கோழி உற்பத்தி தொழிலுக்கு அடுத்தபடியாக, தென்னை விவசாயம் பிரதான தொழிலாக விளங்கி வருகிறது. இப்பகுதிகளில் மட்டும் எட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. விசைத்தறி, கறிக்கோழி உற்பத்தி மற்றும் பனியன் சார்ந்த தொழில் கள் போல் தென்னை விவசாயத்துக்கு அதிகப்படியான ஆட்கள் வேலைக்கு தேவைப்படுவதில்லை. தென்னை விவசாயத்தில் கட்டுப்படியாகும் அளவுக்கு நீண்ட காலம் நிரந்தர வருவாய் கிடைக்கிறது.இதன் காரணமாக, பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் வெங்காயம், மிளகாய், காலிபிளவர், மக்காச்சோளம், தக்காளி போன்ற பயிர்களை தொடர்ந்து சாகுபடி செய்து அறுவடைசெய்த விவசாயிகள், தற்போது ஐந்தாண்டுகளில் காய்ப்புக்கு வரும் வீரிய ஒட்டுரக குட்டை, நெட்டை ரக தென்னைகளை சாகுபடி செய்து வளர்க்கும் பணியில் கவனம் செலுத்தி வருகின்றனர். ஏக்கருக்கு 70 தென்னங்கன்றுகள் வீதம் பலர் நடவு செய்து வருகின்றனர். ஒரு ஜோடி தென்னங் கன்றுகள் தர்மபுரியில் இருந்து 120 ரூபாய்க்கு விவசாயிகள் வாங்கி, தங்களது விவசாய பூமிகளில் குழி தோண்டி நடுகின்றனர். இவ்வாறு நடப்படும் தென்னங்கன்றுகள், நான்கரை ஆண்டுகளில் இருந்து ஐந்தாண்டுக்குள் காய்ப்புக்கு வருகிறது. இத்தகைய தென்னைகள் தொடர்ந்து 60 ஆண்டுகள் வரை பலன் தரக்கூடியது என்கின்றனர், விவசாயிகள்.

ஜல்லிப்பட்டியைச் சேர்ந்த விவசாயி பழனிசாமி கூறியதாவது: வெங்காயம், மக்காச்சோளம், தக்காளி சாகுபடி மற்றும் அறுவடைக்கு விவசாய தொழிலாளர்கள் அதிகமானோர் தேவைப்படுகின்றனர். பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் கடந்த மூன்றாண் டுகளாக விவசாய வேலைக்கு ஆட் கள் போதிய அளவில் கிடைப்பதில்லை. இந்நிலையில், தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் துவங்கப்பட்டதால், விவசாய தொழிலாளர்கள் வேலைக்கு கிடைப்பது அரிதாகியுள்ளது. எனவே, ஐந்தாண்டுகளில் காய்ப்புக்கு வரும் தென்னை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகிறோம். துவக்கத்தில், ஒவ்வொரு தென்னையில் இருந்தும் குறைந்தபட்சம் 100 தேங்காய் வரை கிடைக்கும். சில ஆண்டுகளில் சராசரியாக ஒரு மரத்தில் இருந்து 200 காய்கள் வரை கிடைக்கும். 40 நாட்களுக்கு ஒருமுறை மரத்தில் இருந்து தேங்காய் வெட்டலாம். இளநீராக பறிக்க விரும்பினால், 30 நாட்களுக்கு ஒருமுறை வெட்டலாம்.

தென்னைக்கு மருந்து வைத்தல், பராமரிப்புச் செலவு பெரிய அள வில் ஏற்படுவதில்லை. தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் நிரந்தர வருவாய் காரணமாக, தென்னை வளர்ப்புத் தொழிலை நாட வேண்டியுள்ளது. மழை வளம் குறைந்தால், தென்னையை சொட்டு நீர் பாசனம் மூலமாக காப் பாற்றி விடலாம். தென்னையை நோய்களில் இருந்து காப்பாற்றுவது எப்படி; அதிக மகசூல் பெற வழிமுறை என்ன என்பதை வேளாண் துறையினர் விவசாயி களுக்கு பயிற்சிக்க வேண்டும். இவ்வாறு, பழனிசாமி தெரிவித்தார்.

## தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.4 லட்சம் மானியத்தில் நெல் அறுவடை இயந்திரம்

தூத்துக்குடி, : தூத்துக்குடியில் விவசாயிகளுக்கு மானிய விலையில் நெல் அறுவடை இயந்திரம் மற்றும் மினி டிராக்டர்களை வழங்கும் விழா நடந்தது.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மினி டிராக்டர் வழங்கி கலெக்டர் பேசியதாவது;தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2009-2010ன் கீழ் தூத்துக்குடி மாவட்டத்திற்கு 27 கருவிகள் மானியத்தில் வழங்க அரசு 14 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்தது. அதில் இதுவரை நடப்பாண்டில் பல்வகை பயிர் கதிர் அடிக்கும் கருவி 1, மக்காச்சோளம் கதிரடிக்கும் கருவிகள் 2, எட்டு குதிரை திறனுக்குள் உள்ள இயந்திர களைக்கருவிகள்

3, மினி டிராக்டர் 2, ரோடோவேட்டர் 3, இருபாலர் உபயோகிக்கும் விவசாய கருவிகள் ஆகியவை நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 4 லட்ச ரூபாய் மானியத்தில் ஒரு நெல் அறுவடை இயந்திரம், ஒரு லட்சத்து 25 ஆயிரம் மானியத்தில் இரண்டு மினி டிராக்டர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனசிங் டேவிட், வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் கணேஷ்பாபு, வேளாண்மை அலுவலர் பாலசிங், இளநிலை பொறியாளர்கள் சிதம்பரம், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தீவிர பருத்தி பெருக்க திட்ட விவசாயிகள் பயிற்சி முகாம்

தென்காசி: மலையடிக்குறிச்சியில் தீவிர பருத்தி பெருக்க திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.

வாசுதேவநல்லூர் வட்டாரம் மலையடிக்குறிச்சியில் வேளாண்மை துறை சார்பில் தீவிர பருத்தி பெருக்க திட்டத்தின் கீழ் பருத்தி சாகுபடி பற்றிய விவசாயிகளுக்கான தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் தலைமை வகித்து பேசும் போது, பருத்தி சாகுபடி பரப்பளவு குறைந்து கொண்டே வருவதால் பருத்திக்கான தேவை அதிகரித்துள்ளது. பருத்தி சாகுபடியில் விவசாயிகள் அதிக கவனம் செலுத்தினால் நல்ல வருவாயை ஈட்ட முடியும். அதற்கு இதுபோன்ற தொழில் நுட்ப பயிற்சி விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். சிறந்த ரகங்களை தேர்வு செய்து சாகுபடி செய்வதன் மூலம் நல்ல மகசூலை பெறலாம் என்றார்.

வாசுதேவநல்லூரய யூனியன் சேர்மன் சோமசுந்தரபாண்டியன், மலையடிக்குறிச்சி பஞ்., தலைவர் மோகன் முன்னிலை வகித்தனர். வேளாண்மை அலுவலர் ராமசாமி பேசும் போது, பருத்தி சாகுபடியில் உழவியல் தொழில் நுட்பங்களான உழவு, ரக தேர்வு, விதை நேர்த்தி, உயிர் உர நேர்த்தி, அடியுரமிடுதல், நுண்ணூட்ட உரமிடுதல், வேப்பம் புண்ணாக்கு இடுதல் உள்ளிட்ட தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கினார்.

துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் பேசும் போது, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்களான கோடை உழவு செய்தல், பருத்தி விதைக்கும் போதே ஓர பயிராக மக்காச்சோளம், ஆமணக்கு ஊடுபயிராக தட்டை பயறு, சூரியகாந்தி ஆகியனவற்றை வரிசைகளில் விதைத்து பூச்சி தாக்குதல்களை கண்காணிக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு உயிர் காரணிகளான டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் பிளோரோசென்ஸ் என்.பி.வைரஸ், பேசில்லஸ் துரிஞ்சியன்ஸிஸ் போன்றவற்றை தேவைப்படும் போது பயன்படுத்த வேண்டும் என்றார். உதவி வேளாண்மை அலுவலர் செல்�லா வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கினார்.

சிறிய அளவிலான இடுபொருள் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. பயிற்சியில் மலையடிக்குறிச்சி நீர்ப்பாசன சங்க தலைவர் முருகையா பாண்டியன் மற்றும் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் அண்ணாதுரை, ஆறுமுகம் செய்திருந்தனர்.

### நெல் விலை வீழ்ச்சி : நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் கொள்முதல் செய்ய விவசாயிகள் எதிர்பார்ப்பு

திருவண்ணாமலை:தி.மலை மாவட்டத்தில் நெல் வரத்து அதிகரித்து வரும் நிலையில், விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால், நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்தே நெல் சாகுபடி நடந்து வருவதால் மார்க்கெட்டுக்கு நெல் வரத்து தொடங்கியது.

ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பொன்னி நெல் ஒரு மூட்டை (75 கிலோ) ஆயிரத்து 150 ரூபாய் வரை வேளாண் விற்பனை கூடங்களில் விற்பனையானது. இந்நிலையில், மார்ச் 1ம் தேதி முதல் நெல் வரத்து அதிகரிக்க தொடங்கி உள்ளது. தொடர்ந்து வரத்து அதிகரித்து கொண்டே செல்கிறது.திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தம் 18 வேளாண் விற்பனை கூடங்கள் இயங்கி வருகின்றன.

இவைகளில் சேத்துப்பட்டு, செய்யாறு, ஆரணி, போளூர் வேளாண் விற்பனை கூடங்களுக்கு அதிகளவில் நெல் வரத்து உள்ளது. அதிலும் சேத்துப்பட்டு, செய்யாறு வேளாண் விற்பனை கூடங்களுக்கு சில நாட்களில் 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் நெல் மூட்டைகள் வரத்து உள்ளது.நெல் கொள்முதலில் மாநில அளவில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி முதல் இடத்தையும், தி.மலை மாவட்டம் சேத்துப்பட்டு 2வது இடத்தையும் பிடித்துள்ளன.

இந்நிலையில், நெல் வரத்து அதிகரித்தும் கூட, கடந்த 4 நாட்களாக நெல் விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது. ஒரு மூட்டை பொன்னி நெல் 750 முதல் 850 ரூபாய்க்கு தான் விலை போகிறது. இது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தி உள்ளது.தொடர்ந்து நிலவி வரும் வெயில்தான் விலை வீழ்ச்சிக்கு காரணம் ஆகும்.

தி.மலை மாவட்டத்தில் பிப்ரவரி மாதம் முதலே வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. வெயிலால் நெல் மணிகள் அதிகளவு காய்ந்து விட்டதால், நெல் கட்டுவிட்டது. அதாவது, நெல் தரம் குறைவாக இருப்பதாக கூறி வியாபாரிகள் குறைந்த விலைக்கே நெல் கொள்முதல் செய்கின்றனர்.

எனவே, தி.மலை மாவட்டத்தில் அதிகளவு நெல் வரத்து உள்ள ஒரு சில வேளாண் விற்பனை கூடங்களிலாவது, கர்பொருள் வாணிபக்கழகம் மூலம்நேரடி நெல் கொள்முதல் செய்தால், விலை வீழ்ச்சியை தவிர்க்க மாற்று வழி ஏற்படும். இதன் மூலம் தங்களுக்கும் உரிய விலை கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

### நிலக்கடலை பயிரில் அதிக மகசூல் பெற ஜிப்சம் இடுவது அவசியம் வேளாண் அதிகாரி யோசனை

மன்னார்குடி: நிலக்கடலை பயிரில் அதிக மகசூல் பெற ஜிப்சம் இட வேண்டும் என்று விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை தெரிவித்துள்ளார்.இதுகுறித்து மன்னார்குடி வேளாண் உதவி இயக்குனர் மயில்வாகனன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மன்னார்குடி, கோட்டூர் வட்டாரத்தில் பரவலாக இறவை நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. இறவை நிலக்கடலைக்கு ஜிப்சம் இட்டு மண் அணைக்கும் தொழில்நுட்பம் அவசியமானதாகும். விழுதுகள் மண்ணில் எளிதாக இறங்க செடிகளை சுற்றி மண் அணைக்க வேண்டும். நிலக்கடலையில் பொக்கற்ற திரட்சியான கடலை பெற ஜிப்சம் இடுவது அவசியம். ஜிப்சத்தில் சுண்ணாம்பு சத்தும், கந்தக சத்தும் உள்ளது. நிலக்கடலை திரட்சியாக இருக்க சுண்ணாம்பு சத்து தேவை. காய்களில் எண்ணை சத்து அதிகரிக்க கந்தக சத்து முக்கியம். எனவே நிலக்கடலை பயிருக்கு இந்த 2 சத்தும் கிடைக்க ஜிப்சத்தை உரமாக இடுவது பலன் தரும்.நிலக்கடலை பயிரில் விதைத்த 40 முதல் 45 நாட்களுக்குள் விழுது இறங்கும் பருவமாகும். இந்த தருணத்தில் இரண்டாம் களை எடுத்து ஏக்கருக்கு 20 கிலோ என்ற அளவில் ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். ஜிப்சத்தை செடிக்கு மேலாக இட வேண்டும். இதற்கு மெல்லிய துணியில் ஜிப்சத்தை எடுத்து அதனுடன் இரண்டு மூன்று கற்களை போட்டு அதனை செடிக்கு மேலாக குலுக்கியபடி சென்றால் ஜிப்சம் துகளாகப் படிந்து காற்றடிக்கும் போது செடியின் அடிப்புறத்தில் தங்கும். ஒரு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடுவதின் மூலம் ஒரு ஏக்கருக்கு குறைந்தபட்சம் 2 முதல் 3 மூட்டை நிலக்கடலை கூடுதல் மகசூல் பெறலாம்.

**சின்ன சின்ன செய்திகள்**

*மார்ச்* 09,2010,10:16 IST



தென்னையில் புதுக்கோட்டை பலா ஊடுபயிர்: தென்னை நட்டதிலிருந்து 40 வருடத்திற்கு மேல் வயதான தென்னந்தோப்புகளிலும் 24 து 24 அடி இடைவெளிவிட்டு நடவு செய்யப்பட்டுள்ள அனைத்து மண்வகை (கரிசல் மண் தவிர)களிலும் புதுக்கோட்டை பலா ஏக்கருக்கு 150 வரைக்கும் நடலாம். 4 தென்னை மரத்துக்கு நடுவில் ஒரு பலா வீதம் நடலாம். அதாவது 2 அடிக்கு து 2 அடி து 2 அடி அளவுள்ள குழிகள் எடுத்து குழிக்கு 100 கிராம் வேப்பம் புண்ணாக்கு, மண்புழு உரம் அல்லது டீத்தூள் வேஸ்ட் நிரப்பி 7 மாதம் முதல் ஒரு வருட வயதுள்ள 4-5 அடி உயரமுள்ள பலா கன்றுகளை நடவுசெய்து தென்னைக்கு தண்ணீர் கொடுக்கும்போதே இதுக்கும் கொடுத்தால் போதும். தண்ணீர் இல்லை என்றாலும் சாகாது.

ஏனென்றால் பலா ஒரு பால்வகை மரமாகும். அதனால் வறட்சியைத் தாங்கி வளரும். தென்னையைவிட 5 மடங்கு வருமானத்தை வருடந்தோறும் பலா கொடுக்கும். நட்ட செடிக்கு வருடத்திற்கு இருமுறை இயற்கை உரம் மட்டும் கொடுத்து 15 அடி வரை பக்கக் கிளைகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். 5-6வது வருடத்தில் பலா பலன்தர தொடங்கும். சராசரியாக ஒரு ஏக்கர் தென்னையில் பலா ஊடுபயிர் செய்தால் 75 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். அதிகபட்ச செலவு 5000 ரூபாய்தான் ஆகும். மேலும் விபரங்களுக்கு ""குமிழ் எஸ்டி.சண்முக சுந்தரம், 94860 60136/ 98942 91818'.

இலைவழி ஊட்டம்: பசுமாட்டின் சிறுநீர் கோமியம். இதை மெல்லிதாக உள்ள குறுகிய கால பயிர்களுக்கு 3 முதல் 5 சதம் வரை பயன் படுத்தலாம். அதாவது 5 லிட்டர் கோமியத்துடன் 95 லிட்டர் நீர் சேர்த்து தெளிக்க வேண்டும். கொய்யா, மா, எலுமிச்சை போன்ற பழச் செடிகளுக்கு 10 சதம் வரை பயன்படுத்தலாம். இதற்கு மேல் அதிக சதவீதத்தில் இதனைப் பயன் படுத்தக் கூடாது. ஏனெனில் பயிர் கருகிவிடும்.

ஒருமுறை கோமியம் தெளித்தால் அடுத்த முறை தசகவ்யா தெளிக்கலாம். கோமியத்தில் தழைச்சத்து உள்ளது. அத்துடன் சிறிதளவு சுண்ணாம்பு சத்தும் உள்ளது. இது ஓர் அளவுக்கு பூச்சியையும் விரட்டும் தன்மை உடையது.

செண்டுமல்லி: தென்னையில் ஊடுபயிராக சாகுபடி செய்ய எம்.டி.யு.1 ரகம் ஏற்றதாகும். அனைத்து மண் வகைகளிலும் ஊடுபயிராக ஆண்டு முழுவதும் பயிரிடலாம். 25 து25 அடி இடைவெளி உள்ள 2 தென்னை வரிசைகளுக்கு மத்தியில் 45 செ.மீ. து 30 செ.மீ.

இடைவெளியில் கிழக்கு மேற்காக 6 வரிசைகளில் பார்கள் அமைத்து நாற்றுகளை நடவேண்டும். ஒரு எக்டருக்கு 1.5 கிலோ விதை தேவைப்படும். ஒரு எக்டருக்கு இடவேண்டிய உரம் - தொழு உரம் / கம்போஸ்ட் உரம் 25 டன், தழைச்சத்து (கிலோ) 90, மணிச்சத்து (கிலோ) 90, சாம்பல் சத்து (கிலோ) 75. நட்ட 60 நாட்களில் பூக்கள் அறுவடைக்கு வரும். ஒரு எக்டர் தென்னையில் செண்டுமல்லியை ஊடுபயிராக பயிர் செய்யும்பொழுது கிடைக்கும் நிகர லாபம் 24 ஆயிரம் ரூபாய் ஆகும்.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**நவீன தொழில்நுட்பம்**

*மார்ச்* 09,2010,10:14 IST



மக்காச் சோளத்தில் மகசூல் அதிகரிக்க சொட்டுநீர் வழி உரமிடல்: நீர்வழி உரமிடுதல் என்பது நீர் மற்றும் உரச் சத்துக்களை பயிரின் வேர் பகுதியில் நீரின் மூலம் செலுத்துவதாகும். நீர்வழி உரம் இடுதல், சொட்டுநீர் பாசனத்தில் மிக வும் எளிதாகும். இம்முறையில் உரத்தை நீரில் கலந்து பின்னர் சொட்டுநீர் குழாயின் வழி செலுத்துவதால்

உரச்சத்துக்கள் பயிரின் வேர்ப்பகுதியில் செலுத்தப்படுகிறது. நீரையும் உரச்சத்தையும் மிகவும் குறைந்த அளவிலேயே செலுத்தப்படுவதால் பழைய முறையில் (நீர் பாசனம்) நீரோடு சத்துக்களும் வழிந்தோடி வீணாவது போல் இதில் வீணாகாமல் தடுக்கப்படுகிறது.

சொட்டுநீர் வழி உரமிடுதலில் குறைந்த அளவு நீரும் உரமும் பலமுறை (3 நாட்களுக்கு ஒரு முறை) பயிரின் தொடக்கம் முதல் அறுவடை வரை செலுத்தப்படுவதால் பயிரின் மகசூல் மும்மடங்கு அதிகரிக்கப்பதாகவும், 50 சதவீதம் உரத்தை சேமிக்கவும் முடியும் என வேளாண் ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

கோவை விவசாய பல்கலைக் கழகத்தில் 2006-2007ம் ஆண்டில் கோ.எச்.எம்.5 ரக மக்காச் சோளம் பயிரிடப்பட்டு சொட்டுநீர் பாசனம் மற்றும் நீர்வழி உரங்களின் தாக்கம் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது.

இணைவரிசை முறையில் வீரிய ஒட்டு கோ.எச்எம்.5 மக்காச் சோளமானது 75/45து20 செ.மீ. என்ற இடைவெளியில் விதைக்கப்பட்டது. பயிருக்கு தேவையான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துக்கள் முறையே யூரியா, மோனோ அம்மோனியம் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் மூலம் சொட்டுநீர் பாசனத்தின் வழியாக கொடுக்கப்பட்டது. 3 நாட்களுக்கு ஒரு முறை விதைப்புக்கு பின் 12ம் நாளிலிருந்து 71வது நாள் வரை கொடுக்கப்பட்டது. பயிருக்கு தேவையான 100 சதவீதம் நீரின் அளவை சொட்டுநீர் பாசனத்தின் வழி கொடுக்கும்போது அதிக தானிய மகசூல் (எக்டருக்கு 7151 கிலோ) கிடைத்தது.

தண்ணீரின் அளவை 75 சதவீதமாக குறைக்கும்போது மண்ணிற்கு நிகரான (நீர்பாசனம் மூலம் பாய்ச்சிய பிறகு) மகசூல் கிடைத்தது.

உரத்தின் அளவைப் பொறுத்தவரையில் 125 சதவீதம் பரிந்துரைக்கப்பட்ட உரத்தின் அளவை சொட்டுநீர் பாசனத்தின் வழியாக கொடுக்கும்போது தானிய மகசூல் எக்டருக்கு 7312 கிலோ அளவில் கிடைத்தது. இதற்கு நிகரான மகசூல் 100 சதவீதம் பரிந்துரைக்கப்பட்ட உரத்தின் அளவை சொட்டுநீர் பாசனத்தின் வழியாக கொடுக்கும் போதும் கிடைத்தது.

சொட்டுநீர் பாசனத்தோடு 100 சதவீதம் பரிந்துரைக்கப்பட்ட உரத்தை மண்ணின் மேற்பரப்பில் இடும்போது 16 சதவீதம் குறைந்த மகசூல் கிடைத்தது. எனவே சொட்டுநீர் பாசனம் மற்றும் மண்ணின் மேற்பரப்பில் உரத்தை இடும் முறையைவிட உரத்தை சொட்டுநீர்வழி உரம் இடுவதால் 25 சதவீதம் உரத்தை மிச்சப்படுத்தலாம்.

(தகவல்: க.ரமா, சாந்தி பொன்னுச்சாமி, க.பொன்னுச்சாமி, உழவியல் துறை, த.வே.பல்கலைக்கழகம், கோவை-641 003, 0422-661 1256)

### தென்னை இலைக்கருகல் நோய் கட்டுப்பாடு

மார்ச் 09,2010,10:12 IST



தென்னையைத் தாக்கும் பல பூசணி நோய்களில், இலைக்கருகல் நோய் பொள்ளாச்சி பகுதிகளிலும், தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் சமீபகாலமாக அதிகளவில் காணப்படுகிறது. லேசியோடிப்லோடியா தியோபுரோமே என்ற பூசணம் இந்நோயை உண்டாக்குகிறது.

இந்நோய் நான்கு மாத நாற்றுகள் முதல் 60-70வயதுடைய முதிர்ந்த மரங்கள் வரை தாக்குகின்றது. இந்நோயினால் 10-25 சதம் காய் மகசூல் இழப்பு ஏற்படுகின்றது. இந்நோய் எரியோபைட் சிலந்தி தாக்கிய காய்களில் மேலும் அதிக பாதிப்பை உண்டாக்குகிறது.

இந்நோய் இலைமட்டை மற்றும் காய்களைத் தாக்கும். இந்நோய் நன்கு முதிர்ந்த அடிமட்டை இலைகளை முதலில் தாக்கி பின் மற்ற மட்டைகளுக்குப் பரவுகின்றது. இலைகளில் முதலில் மஞ்சள் நிற புள்ளிகள் தோன்றும். பின் புள்ளிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து கருகி காணப்படும். நோய் முற்றிய நிலையில் இலை நுனி மற்றும் ஓரங்கள் சுருங்கி, பின் கருகி, கீழ்நோக்கி வளைந்து காணப்படும். இலைக்கருகல் நோயால் இலையின் பரப்பளவு குறைந்து ஒளிச்சேர்க்கைத்திறன் அதிகளவில் குறைக்கப்படுகிறது.

காய்களின் நுனிப்பகுதிகளில் பழுப்பு நிற புள்ளிகள் காணப்படும். நாளடைவில் பூசண வளர்ச்சி காய்களின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளும். பாதிக்கப்பட்ட காய்கள் சுருங்கி, உருக்குலைந்து காணப்படும். பூசணம் பருப்புக்குள் பரவி முளை சூழ்தசையை (எண்டோஸ்பெர்ம்) அழுகச் செய்யும்.

இந்நோயினால் நாற்றுகளின் வளர்ச்சி குன்றி, இலை உற்பத்தி குறைந்து, மகசூலும் குறைந்து காணப்படும். நோயின் தீவிரம் அதிகரிக்கும்போது இலைகள் முழுவதும் காய்ந்து கருகிய தோற்றத்துடன் காணப்படும். இந்நோய் வருடம் முழுவதும் காணப்பட்டாலும், நோயின் தாக்குதல் டிசம்பர் மாதத்தில் அதிகமாகவும், ஜூன் மாதத்தில் குறைவாகவும் காணப்படும். பொதுவாக குறைந்த அளவு வெப்பநிலை, அதிக ஈரப்பதம் உள்ள மழைக்காலங்களில் நோயின் தீவிரம் அதிகமாகும். நோய் தாக்கப் பட்ட மரத்திலிருந்து பூசண வித்துக்கள் காற்றின் மூலம் ஒரு இலை மட்டையிலிருந்து மற்ற இலை மட்டைகளுக்கும் மற்ற மரங்களுக்கும் எளிதாக பரவுகின்றது.

ஒருங்கிணைந்த வேளாண்மை முறைகள்: நோய் முற்றிய இலைகளை வெட்டி எரிந்துவிடுவதால் நோய் பரவுவதை தடுக்கலாம். சூடோமோனாஸ் புளூரசன்ஸ் என்ற எதிர் உயிரி பாக்டீரியம் 200 கிராம் என்ற அளவில் 50 கிலோ மக்கிய

தொழு உரம் கலந்து நோய் தாக்கிய மரங்களைச் சுற்றி மண்ணில் இடவேண்டும். தொடர்பு: க.ராஜமாணிக்கம், ஆழியார் நகர், 04253-288 722.

-கே.சத்தியபிரபா,4/164, எஸ்.எஸ்.காலனி, உடுமலை.

### இயற்கை வழி ஏலக்காய் பண்ணை அமைப்பு

மார்ச் 09,2010,10:04 IST



ஏலக்காயானது மேற்கு தொடர்ச்சி மலைகளில் கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உள்ள உயிரி வேறுபாடு அதிகமுடைய பசுமை மாறாக் காடுகளிலுள்ள மரங்களுக்கு இடையில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. ஒரு தன்னிறைவு பெற்ற இயற்கை வழியில் ஏலக்காய் பண்ணைக்கு கீழ்க்கண்ட வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

தங்கும் விடுதிகள்: கட்டிடங்களின் அளவானது விவசாயியின் குடும்பத்தி லுள்ள அங்கத்தினர் எண்ணிக்கை, அவ ரது பொருளாதார நிலை இவற்றைப் பொறுத்தே அமையும். முடிந்தவரையில் ஒரு சாதாரண வாழ்க்கைக்கேற்ப எளிய முறையில் தங்கும் விடுதிகளை அமைப்பது உகந்தது.

பக்குவப்படுத்தும் அறை மற்றும் சேமிப்பு அறை: பக்குவப்படுத்தும் அறை சாகுபடிப் பரப்பளவை பொறுத்து அமைக்கப்பட வேண்டும். ஒரு 15-20 எக்டர் தோட்டத்திற்கு 800 கிலோ பச்சைக் காய்களை பக்குவப் படுத்துவதற்கு சாதாரணமாக விறகுதான் எரிபொருளாக பயன்படுத்தப் படுகிறது. விறகுக்காக அதிக அளவில் மரங்களை வெட்டுவதால் இயற்கை வளங்கள் குறைந்துவிடும் என்ற காரணத்தால் மிகக்குறைவான அளவில் எரிபொருள் தேவைப்படுகின்ற பக்குவப்படுத்தும் முறைகளை கையாள வேண்டும். இது தவிர, விறகுகளை மட்டும் பயன்படுத்தாமல், பிற இயற்கை வளங்களான சூரிய சக்தி, உயிரி வாயு (பயோ-கேஸ்) போன்றவற்றை உபயோகப்படுத்த வேண்டும். மேலும் விறகுக்காக மரங்களை வளர்ப்பதற்கென்று பண்ணையில் தனி இடம் ஒதுக்கப்பட வேண்டும். உலர்ந்த ஏலக் காய்களை சேமிக்கும் அறைகள் பாதுகாப்பு கருதி பக்குவப் படுத்தும் அறைகளுடன் சேர்ந்தே இருக்க வேண் டும். இந்த இரண்டு அறைகளும் தங்கும் விடுதிகளுக்கு அருகிலேயே அமைக்கப் பட வேண்டும்.

இயந்திரங்கள் மற்றும் இடுபொருட்கள் சேமிக்கும் அறைகள்: இந்த அறைகளும் எளிதில் போய் வர ஏதுவாக தங்கும் விடுதிகளுக்கருகிலேயே இருக்க வேண்டும். ஒரு 15-20 எக்டர் தோட்டத்திற்கு 15 ச.மீ. அளவுள்ள சேமிப்பு அறை போதுமானதாகும்.

கால்நடை கொட்டகை மற்றும் உயிரி வாயு கிடங்கு: ஒரு 15-20 எக்டர் தோட்டத்திற்கு தேவையான தொழுஉரம் தயாரிக்க 12-15 பசுக்கள் தேவை. இதற்கு சுமார் 100 ச.மீ. அளவுள்ள கொட்டகை தேவைப்படும். தங்கும் விடுதிகளுக்கு ஒரு புறம் சேமிப்பு மற்றும் பக்குவப்படுத்தும் அறைகளையும் மறுபுறம் கால்நடை கொட்டகைகளையும் அமைத்துக் கொள்வது உகந்ததாக இருக்கும். உயிரிவாயு கிடங்கை தங்கும் விடுதிக்கும் கால்நடை கொட்டகைக்கும் நடுவில் ஒரு தாழ்வான இடத்தில் அமைத்துக் கொள்ளலாம்.

மண்புழு உரக்குழி மற்றும் குப்பை மக்குக் களம்: ஒரு 15 எக்டர் தோட்டத்திற்கு 3 து 1 து 0.6 மீ அளவுள்ள ஐந்து மண்புழு உரக் குழிகள் தேவை. ஒரு குவியல் மக்கிய குப்பை உரம் தயாரிக்க சுமார் 15 ச.மீ. பரப்பளவு இடம் தேவை. தோட்டம் முழுவதற்கும் இதுபோன்று 15 குவியல் குப்பை உரம் தயாரிக்கப்பட வேண்டும்.

பாசனத்திற்கு நீரேற்றும் அறை மற்றும் நீர் ஆதாரம்: தோட்டத்திற்கு தேவையான நீர் ஆதாரங்களை ஏற்படுத்திக்கொள்ள, தடுப்பு அணைகள் அல்லது ஆழம் நிறைந்த கிணறு அல்லது குளங்கள் அமைக்கப்பட வேண்டும். இவற்றை வசதியான இடங்களில் அமைக்க வேண்டும். இந்த நீர் ஆதாரங்களை தோட்டங்களின் உயரமான பகுதிகளில் அமைக்க முடியுமானால் பூமியின் புவிஈர்ப்பு விசையின் மூலம் எளிதில் பாசனம் செய்யலாம். ஆனால் பெரும்பாலும் நீர் ஆதாரங்கள் தாழ்வான பகுதிகளிலும் சரிவுகளிலுமே இருப்பதால் நீரேற் றும் அறையும் நீரேற்றத் தேவையான பம்புசெட் போன்றவைகளும் தேவைப்படும்.

சாலைகள்: ஏலக்காய் செடிகளின் வரிசைக்கு இடையில் சாலைகளும் நடைபாதைகளும் அமைக்கப்பட வேண்டி உள்ளதால் முடிந்தவரையில் செடிகளுக்கு பாதிப்பு வராமல் மிக குறைந்த பரப்பிலே சாலைகள் அமைக்கப்பட வேண்டும். தொடர்பு: ஸ்பைசஸ் இந்தியா, கேராபவன், கொச்சின்.

சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவில் ரப்பர் உற்பத்தி 8.65 லட்சம் டன்னாக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

திருவனந்தபுரம்

சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில், இந்தியாவில் இயற்கை ரப்பர் உற்பத்தி 8.65 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இதில் 4.74 சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கேரள மாநில திட்ட வாரியம் வெளியிட்டுள்ள பொருளாதார ஆய்வறிக்கை வாயிலாக இது தெரிய வந்துள்ளது.

பயிரிடும் பரப்பளவு

ரப்பர் பயிரிடும் பரப்பளவு அதிகரித்து வருவது மற்றும் உற்பத்தி திறன் மேம்பட்டிருப்பது போன்றவற்றால் ரப்பர் உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என்று இத்துறையைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். நாட்டின் மொத்த ரப்பர் உற்பத்தியில் கேரள மாநிலத்தின் பங்களிப்பு 80 சதவீதமாகும்.

சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில், கேரள மாநிலத்தில் ரப்பர் பயிரிடும் பரப்பளவு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 5,430 ஹெக்டேர் அதிகரித்து 5.17 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. கடந்த 1998–99–ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேரின் ரப்பர் உற்பத்தி திறன் 1,190 கிலோவாக இருந்தது. இது, 2008–09–ஆம் நிதி ஆண்டில் 1,514 கிலோவாக உயர்ந்துள்ளது. ஆக, பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ள நிலையில், உற்பத்தி திறனும் மேம்பட்டுள்ளதால், கேரளா மாநிலத்தில் ரப்பர் உற்பத்தி 4.03 சதவீதம் அதிகரித்து 7.83 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதனையடுத்து, ஒட்டுமொத்தத்தில் நாட்டின் ரப்பர் உற்பத்தி மேம்பட்டுள்ளது.

டயர் தயாரிப்பில் இயற்கை ரப்பர் முக்கிய மூலப் பொருளாக உள்ளது. எனவே, இதன் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி டயர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். ஏனென்றால், மோட்டார் வாகனங்கள் விற்பனையில் ஏற்பட்டுள்ள எழுச்சியால், இத்துறை நிறுவனங்கள் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதனால் இந்தியாவில் ரப்பர் பயன்பாடு அதிகரிக்க உள்ளது.

சர்வதேச சந்தைகயில் ரப்பர் விலை மிகவும் உயர்ந்துள்ளது. உள்நாட்டில் ரப்பர் உற்பத்தி மேம்படுவதால், இறக்குமதிக்காக வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை குறையும்.

இறக்குமதி

இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் ரப்பர் இறக்குமதி, முந்தைய ஆண்டைக் காட்டிலும் 10 சதவீதம் குறைந்து 86,394 டன்னிலிருந்து 77,616 டன்னாக குறைந்துள்ளது.

இயற்கை ரப்பர் உற்பத்தியில், தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. ரப்பர் பயன்பாட்டிலும் நம் நாடு நான்காவது இடத்தில் உள்ளது. சீனா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களில் உள்ளன.

நடப்பு ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் நாட்டின் ரப்பர் உற்பத்தி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 6.6 சதவீதம் அதிகரித்து 48,295 டன்னிலிருந்து 51,500 டன்னாக உயர்ந்துள்ளது. இதே மாதத்தில் ரப்பர் பயன்பாடு உற்பத்தியையும் விஞ்சிடும் வகையில் 8.4 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது, இதன் பயன்பாடு 71,520 டன்னிலிருந்து 77,500 டன்னாக உயர்ந்துள்ளது.

டயர் நிறுவனங்கள்

இந்நிலையில், சென்ற பிப்ரவரி மாதத்தில் ரப்பர் இறக்குமதி 2,420 டன்னிலிருந்து சுமார் 5 மடங்கு அதிகரித்து 10,236 டன்னாக உயர்ந்துள்ளது. அதேசமயம், இதே மாதத்தில் இதன் ஏற்றுமதி ஒரு டன் மட்டுமே அதிகரித்து 2,258 டன்னாக உயர்ந்துள்ளது. சென்ற நிதி ஆண்டில், ரப்பர் ஏற்றுமதி 65 சதவீதம் சரிவடைந்து 15,358 டன்னாக குறைந்தது.

டயர் நிறுவனங்கள், முழுவீச்சில் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளதால், இதன் உற்பத்தி அதிகரித்து வரும் நிலையிலும், ரப்பர் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்து வருகிறது. கேரளாவில் ஒரு கிலோ ரப்பர் விலை இதுவரை கண்டிராத வகையில் ரூ.143.50–ஆக உயர்ந்துள்ளது. கடந்த 2008–ஆம் ஆண்டில் இதன் விலை ரூ.142–ஆக இருந்தது. அப்போது இது மிகவும் அதிக விலையாக கருதப்பட்டது. தற்போதுள்ள விலை இதையும் விஞ்சிவிட்டது.

## ஊட்டியில் மரக்கன்றுகள் நடும் விழா



துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நகர தி.மு.க. சார்பில் ஊட்டியில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்ட போது எடுத்த படம்.

ஊட்டி, மார்ச்.10–

தமிழக துணை முதல்– அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த தின விழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஊட்டி நகர தி.மு.க.வின் சார்பில் நடத்தப்படுகிறது. அதே போல் இந்த ஆண்டும் துணை முதல்–அமைச்சரின் 58–வது பிறந்த தின விழாவின் தொடர் நிகழ்ச்சியாக ஊட்டியில் நேற்று 58 மரக்கன்றுகள்

நடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு ஊட்டி நகர செயலாளர் ஜே.ரவிக்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட அவை தலைவர் என்.முத்துசாமி மரக்கன்றை நட்டு தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் சுசிலா அகிலன், மாவட்ட பிரதிநிதிகள் ராஜா, கர்ணன், நகர பொருளாளர் வி.தியாகராஜன், நகர துணை செயலாளர்கள் சிராஜூதீன், ஜி.சசிக்குமார், ரீட்டாமேரி, நகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.ஆர்.மூர்த்தி, கவுன்சிலர்கள் ஜார்ஜ், ரவி, கார்த்திக், ஒன்றிய அவை தலைவர் ஜோகி உள்பட பலர் கலந்து கொண்டனர்.